

## விலையேறப்பெற்ற
# பரிசுத்தம்

– சகோதரி. நிஜா கென்னடி

**நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்.**

**- 1 பேதுரு 1:16**

**ஆ**ண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் பார்த்து ''நான் பரிசுத்தராக இருப்பதால், நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்'' என்று சொல்லுகிறார். பரிசுத்தம் விலைமதிப்பில்லாதது. பரிசுத்தத்திற்கு ஒரு விலையை நிர்ணயிக்க வேண்டும் என்றால் அந்த விலை இயேசு கிறிஸ்துவே. ஆம், எனக்கு பிரியமானவர்களே, நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்மையே ஜீவபலியாக கல்வாரி சிலுவையிலே ஒப்புக்கொடுத்து,பாவத்திலிருந்து நம்மை மீட்டு நமக்கு பரிசுத்தத்தைக் கொடுத்திருக்கிறார் (எபிரெயர் *10:10*). பரிசுத்தம் என்பது நம் ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றிலும் வேண்டும். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்முடைய பாவங்கள் கழுவப்படும்பொழுது நம் மனசாட்சி கழுவப்பட்டு சுத்தமனசாட்சியாகிறது. இத்துடன் பரிசுத்தம் முற்றுப்பெறவில்லை. அனுதினமும் வேதத்தின் வார்த்தைகளினால் நம் மனசு பரிசுத்தமாக்கப்படவேண்டும் (ரோமர் *12:2*).

இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட ஒவ்வொரு விசுவாசியும் தொடர்ந்து பரிசுத்தமாக இருக்கவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இயேசு கிறிஸ்துவை நம் இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் முன் செய்து வந்த தீமையான பாவகாரியங்களை நாம் விட்டுவிடவேண்டும். தேவனை அறியாததினால் தேவனுக்கு பிரியமில்லாததை செய்து வந்தோம். தேவனை அறியாத உலக மக்களைப் போல வாழவேண்டும் என்று அவர்களை பின்பற்றி வாழக்கூடாது. இயேசு கிறிஸ்துவின் சுபாவங்களைப் பின்பற்றி அவரைப்போல வாழவேண்டும். இவ்வுலக மக்கள் நம்மை புகழவேண்டும், உயர்வாக மதிக்கவேண்டும் என்பதற்காக நாம் இந்த உலகத்தில் வாழக்கூடாது. கர்த்தர் நம்மை குறித்து என்ன நினைக்கிறார் என்றும், அவருக்கு பிரியமானது எது என்றும் அறிந்து அவருக்கு பிடித்த ஒரு வாழ்க்கை வாழவேண்டும்.இவ்வுலகத்தின் பாவங்களான பொறாமை, பகை, சண்டை, விரோதங்கள், ஏமாற்றுதல், கொலை கொள்ளை, பொருளாசை, பெருமை, இச்சைகள் ஆகியவற்றிற்கு விலகி தேவனுக்கு பிரியமானதை செய்யவேண்டும்.



தேவனுடைய இயற்கையான குணமே பரிசுத்தம். இந்த பரிசுத்தத்தை நாம் பின்பற்றி வாழ்வதே நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும். தேவனைப் பின்பற்றி வாழும் ஒவ்வொருவருக்கும் தேவன் அன்புள்ளவராக இரக்கமுள்ளவராக, நியாயஞ்செய்கிறவராக, விசாரிக்கிறவராக, தேவைகளை சந்திக்கிறவராக இருக்கிறார். நாமும் அவரைப்போல மற்றவர்களிடம் அன்புள்ளவர்களாக, இரக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

### பரிசுத்தமுள்ள வாழ்க்கை

**உங்களை அழைத்தவர் பரிசுத்தரராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்.**

***- 1 பேதுரு 1:15***

நம்முடைய பரலோக தகப்பனைப்போல, நாம் செய்யும் எல்லா காரியத்திலேயும் பரிசுத்தமாக இருக்கவேண்டும். பரிசுத்தம் என்பது, தேவன் மீதுள்ள அன்பினால், நம்மை முற்றிலுமாக தேவனுக்கென்று அர்ப்பணித்து பாவத்திற்கு விலகியிருந்து, பாவம் நம்மை ஆளுகை செய்யாதபடி,பரிசுத்தமாக வாழ்வதாகும். இயேசு கிறிஸ்து ஒளியாய் நமக்குள் வரும்போது, நம்மில் இருக்கும் பாவமாகிய இருள் நம்மைவிட்டு விலகிப்போய் நம் வாழ்க்கை பிரகாசிக்கும். இயேசு கிறிஸ்துவின் சுபாவமாகிய பரிசுத்தம் நமக்குள் வரும். நம்மூலமாக அநேகருடைய வாழ்க்கை மாற்றப்பட்டு, அவர்களும் கிறிஸ்துவின் சுபாவமுடையவர்களாய் ஒளிவிட்டுப் பிரகாசிப்பார்கள்.

பரிசுத்தமுள்ளவர்கள் உலக மக்களோடு கலந்து ஒன்றாக வாழ முடியாது. அவர்களிடமிருந்து இயேசுகிறிஸ்துவின் சுபாவங்கள் வெளிப்படும். இதுவே உலக மக்களிடமிருந்து அவர்களை வேறுபடுத்தி பிரித்து காண்பிக்கும். அவர்கள் வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடம் கொடுப்பார்கள். அவர்களது கவனம் முழுவதும் இயேசு கிறிஸ்துவின் மேலேயே இருக்கும். அவர்கள் பழைய வாழ்க்கையை (கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் முன்) ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இப்பொழுது வாழும் வாழ்க்கை முற்றிலும் மாறுபட்டதாயிருக்கும்.

**நீங்கள் முன்னே உங்கள் அறியாமையிலே கொண்டிருந்த இச்சையின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளா யிருந்து,**

**- 1 பேதுரு 1:14**

தேவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது, பிசாசின் தந்திரங்களுக்கு நம்மை விலக்கி பரிசுத்தமாக பாதுகாத்துக் கொள்ளலாம். நாமாகவே பரிசுத்தமாக வாழமுடியாது. தேவ ஆவியானவரின் அபிஷேகத்தை நாம் பெற்றுக் கொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவர் பாவத்தை மேற்கொள்ள நமக்கு உதவி செய்வார். பாவத்தை மேற்கொள்ள முடியாதபோது, ஆவியானவரை நோக்கி கூப்பிட்டு பாவத்தின் பிடியிலிருந்து விடுதலை பெறுவோம். தேவன் தமது வல்லமையினால் நம்மை விடுவிப்பார்.

**அனுதினமும் பரிசுத்தம்**

தினமும் நாம் பரிசுத்தமாக வாழவேண்டும். நாம் வேதத்தை வாசித்து அதன்படி நடக்கும்போது, பரிசுத்தமாக வாழலாம். தேவனோடுகூட உள்ள ஐக்கியத்தில் வளர தனியாக ஜெபிக்கவேண்டும். தினமும் நம்மை நாமே சோதித்து, பாவங்கள் நம் வாழ்க்கையில் இருந்தால் தேவனிடம் அறிக்கை செய்து, நம்மை சரிசெய்து கொள்ள வேண்டும்.

**பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.**

**- நீதிமொழிகள் 22:11**

உலகத்தின் கெட்ட எண்ணங்களும், தீயசிந்தனைகளும் நம்மை தாக்காதபடி, நம்முடைய மனதை தூய்மையானதாக எப்பொழுதும் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் உலக ஜனங்களிடமிருந்து வேறுபிரிக்கப்பட்டவர்கள். தேவன், இஸ்ரவேல் ஜனங்களை மற்ற ஜனங்களிடமிருந்து பிரித்தெடுத்து, அவர்களுக்கென்று தனி தேசத்தைக் கொடுத்து, ஜீவனுள்ள தேவனை மட்டும் தொழுகொள்ள வேண்டும்; கையால் செய்யப்பட்ட விக்கிரகங்களை வழிபடக்கூடாது என்று கட்டளையிட்டார். அதுபோல நம்மையும் இந்த பாவ உலகத்திலிருந்து தேவன் தமக்கென பிரித்தெடுத்து பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். இந்த பரிசுத்தத்தை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பரிசுத்தமாக வாழாத கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் என்ற பெயரைச் சொல்லிக் கொண்டு, தேவனுடைய நாமத்திற்கு பரிசுத்த குறைச்சல் உண்டாக்குபவர்களாவார்கள். பரிசுத்தமில்லாத உலகத்திலே நாம் பரிசுத்தமாக வாழ்வது கடினம்தான். ஆனால், தேவனது உதவியினால் பாவங்களை மேற்கொண்டு பரிசுத்தமாக வாழலாம்.

**முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்குமுன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார். நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும், உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும்.**

**- கொலோசெயர் 1:21,22**

**பரிசுத்தத்திற்கு பாத்திரர்**

ஏசாயா தீர்க்கதரிசி ஒரு தரிசனம் காண்கிறான். அந்த தரிசனத்திலே தேவன் மிகவும் உயரமான, உன்னதமான சிங்காசனத்தின்மேல் அமர்ந்திருக்கிறார். அவரது வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது (ஏசாயா *6:1*). தேவதூதர்கள் தேவாதி தேவனை நம் கர்த்தாதி கர்த்தரை இடைவிடாமல் புகழ்ந்து, போற்றி துதித்துக் கொண்டே இருந்தார்கள். ''சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது; சர்வ வல்லமையுள்ள தேவன் மகாபரிசுத்தமானவர்''



என்று துதித்துக் கொண்டிருக்கின்றனர். அவைகளின் சத்தம் மிகவும் பலமாய் இருந்ததால் கதவுகளின் நிலைகள் அசைந்தது. ஆலயம் புகையினால் நிறைந்தது. அப்பொழுது ஏசாயா மிகவும் பயந்து, ''ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், நான் தேவனோடு பேசுகிற அளவிற்கு பரிசுத்தமானவன் அல்ல, என்னை சுற்றியிருப்பவர்களும் தேவனோடு பேசுகிற அளவிற்கு பரிசுத்தமானவர்கள் அல்ல. நான் சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய ராஜாவை பார்த்தேன் என்றான். தேவதூதன் பலிபீடத்திலிருந்து, குரட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து ஏசாயாவின் வாயை தொட்டதால், அவனது அக்கிரமங்களும் பாவங்களும் மன்னிக்கப்பட்டு, நீங்கியது.

ஏசாயா தேவனையும், அவரது தூதர்களையும் கண்டபோது, தான் அசுத்த உதடுள்ள மனுஷன் என்பதை உணர்ந்து கொண்டான். பரிசுத்தமுள்ள தேவன்முன் நிற்கவும், அவரைக் காண்பதற்கு தகுதியில்லாதவன்; தான் ஒரு பாவி என்று உணர்ந்து அழுதான். நெருப்புத்தழல், பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது. ஆவியானவரின் தொடுதலை உணரும்போது, பாவசுபாவங்கள் சுட்டெரிக்கப்பட்டு, நாம்பரிசுத்தமாகிவிடுகிறோம். தேவ பிரசன்னத்திற்குள் நாம் வரும்பொழுது, தேவனுடைய பரிசுத்தத்தை நன்கு உணரலாம். தேவன் ஒரு மனுஷனல்ல. பாவமில்லாதவர். மனிதர்களாகிய நாமெல்லோரும் பாவத்தில், கர்ப்பந்தரிக்கப்பட்டவர்கள்.

தேவன் ஒருவரே பரிசுத்தர். தேவன் ஒரு மனுஷனாய், இயேசு கிறிஸ்துவாய் இந்த பூமிக்கு வரும்போது, பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரிக்கப்பட்டு பரிசுத்தமான பிள்ளையாய் அவதரித்தார். முதலாம் மனுஷன் ஆதாம் பாவத்தில் விழுந்ததால் அவனைத் தொடர்ந்து வந்த முழுமனிதகுலமும் பாவத்தில் விழுந்தது. பாவத்தை மேற்கொள்ள மனுஷனால் முடியவில்லை.

மனுஷனை பாவத்திலிருந்து மீட்டெடுப்பதற்காகவே இரண்டாம் மனுஷனாக இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து தம் இரத்தத்தை சிலுவையில் சிந்தி, பாவத்திலிருந்து மனுஷனை மீட்டெடுத்தார். நம் பாவங்களை இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்படும்பொழுது, நாம் பரிசுத்தர் ஆகிறோம். இயேசு கிறிஸ்துவின் இரத்தமே பரிசுத்தத்தை தருகிறது. அவர் எப்படிப்பட்டவர் என்பதை அறிக்கை செய்யும்போது, நாம் எப்படிப்பட்டவர் களாய் இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்கிறோம். அதினிமித்தம் அவரைப்போல நாம் இருக்கவேண்டும்



என்பதை உணர்ந்து கொள்கிறோம். அவரைப்போல நம்மை உண்டாக்கினார். அதனால் அவரைப்போலவே நாம் பரிசுத்தமாய் இருக்கவேண்டும்.

**பரிசுத்தத்தை காத்துக் கொள்ளுதல்**

இயேசு கிறிஸ்துவை முன்மாதிரியாக வைத்து, அவரைப்போல நாம் இந்த உலகத்தில் வாழவேண்டும். அவருடைய கட்டளைகளுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும். இயேசு கிறிஸ்து நம்மீதுள்ள அன்பினால் தம்மையே ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தார். அவர் நம்மை நேசித்ததுபோல நாமும் மற்றவர்களை நேசிக்கவேண்டும். கோபம், மூர்க்கம், மற்றவர்கள் மனது புன்படும்படியாக கடுமையாக பேசுதல், கெட்ட வார்த்தைகள் பேசுவது, பொய் பேசுவது, வம்பு பேசுவது, என்ன பேசுகிறோம் என்ற உணர்வில்லாமல் பேசுவது, பரியாசம் பண்ணுவது ஆகியவற்றை விட்டுவிட வேண்டும். விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகியவற்றை நம் வாழ்க்கையில் இருந்து விலக்கி விட வேண்டும். இவைகள் தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு ஏற்றதல்ல.

**அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுகந்தரிப்ப தில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும் விக்கிரகாராதனைக்காரரும், விபச்சாரக் காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும், தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்ப தில்லை.**

**- 1 கொரிந்தியர் 6 : 9, 10**

கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத, மனந்திரும்பாத அவிசுவாசிகளுடனே பிணைக்கப்படாமல் நம்மை காத்துக் கொள்ள வேண்டும். விரிவாக்க வேதாகமம் இவ்வாறாக கூறுகிறது: விபச்சாரக்காரர், சிந்தனையிலும், வாழ்க்கையிலும் அசுத்தமாக வாழ்பவர்கள், தனக்கு மேலும் மேலும் வேண்டும் என்று மற்றவர்கள் சொத்துக்கள்மேல் விருப்பம் கொண்டு, அதை ஆதாயப்படுத்த ஆசைப்படும் சுயநலக்காரனுமான விக்கிரகாராதனை செய்பவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் இடம்பெறுவதில்லை. *(எபேசியர் 5 : 5)* என்பதை நாம் அறிந்து கொண்டு, அப்படிப்பட்டவர்களுடன் சேர்ந்து, தேவனுக்கு பிரியமில்லாத உண்மையற்ற, தீயசெயல்களை செய்தால் தேவகோபம் வரும். அதற்கு விலகி நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு பங்காளியாகாதிருங்கள் என்றும் மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாதே; உன்னை சுத்தவானாக காத்துக்கொள் *(1 திமோத்தேயு 5:22)* என்றும் வேதம் சொல்லுகிறது.

**தேவன் தங்கும் ஆலயம்**

**நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும்,**



**தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?**

**- 1 கொரிந்தியர் 3:16**

நம்முடைய சரீரம் தேவன் தங்கும் ஆலயமாயிருக்கிறது. அதனால் தேவன் கொடுத்த இந்த சரீரத்தை நாம் பரிசுத்தமாக பாதுகாத்துக் கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் தங்கியிருக்கிறார். நாம் நமக்கு சொந்தமான வர்கள் அல்ல. நாம் தேவனுக்கு சொந்தமானவர்கள். தேவன் நம்மை தமது இரத்தத்தினால் விலை கொடுத்து வாங்கியிருக்கிறார். ஆகையால் நம் சரீரத்தாலும், ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். நாம் பாவம் செய்யும்போது, ஆவி, ஆத்துமா, சரீரம் பாதிக்கப்படுகிறது. நம் சரீரத்தை கெடுக்கும் பாவங்களான விபச்சாரத்தையும், வேசித்தனத்தையும் விட்டு விலகவேண்டும்.

ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோட விபசாரஞ்செய்தாயிற்று *(மத்தேயு 6:28)*. வேசியோடு இசைந் திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய் பாவஞ்செய்கிறான் *(1 கொரிந்தியர் 6:16, 18)*. ஆகவே தேவன் தங்கும் ஆலயமாகிய நம் சரீரத்தை கெடுக்க நமக்கு உரிமையில்லை. இப்பாவங்களிலிருந்து நம்மை விலக்கி விடுவித்து பாதுகாத்துக்



கொள்வோம். பாவத்தை அறிக்கையிட்டு மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படும்போது பரிசுத்தமாக்கப்படுகிறோம்; சகல பாவங்களும் நம்மை விட்டு நீங்குகிறது *(1 யோவான் 1:7)* தொடர்ந்து பரிசுத்தத்தை பாதுகாத்துக் கொள்வோம்.

**அன்றியும் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்தஇருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்**

**களுடனே, நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும், சமாதானத்தையும் அடையும்படி நாடு.**

**- 2 தீமோத்தேயு 2:22**

யோசேப்பு கர்த்தர் தன்னை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற உணர்வோடு இருந்ததால், போத்திபாரின் மனைவி தன்னை பாவம் செய்ய அழைத்தபோது, இத்தனை பெரிய பொல்லாப்பை செய்து, தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது எப்படி என்று சொல்லி, அந்த இடத்தை விட்டே ஓடிப்போனான். பாலியல் பாவத்திற்கு விலகிஓடு என்று வேதம் எச்சரிக்கிறது. இதுதேவனுக்கு விரோதமான பாவம். கர்த்தர் இதை அருவருக்கிறார்.

பிறனுடைய மனைவியிடத்தில் பிரவேசிப்பவனும், அப்படியே அவளைத் தொடுகிற எவனும், ஆக்கினைக்குத் தப்பான் (நீதிமொழிகள் *6:29*). யோசேப்பு எப்படி அந்த இடத்தைவிட்டு ஓடி தன் பரிசுத்தத்தை பாதுகாத்துக்கொண்டானோ, அதுபோல நாமும் நம்முடைய வாழ்க்கையில் சோதனைகள் வரும்போது, பாவத்திற்கு விலகி, நம் பரிசுத்தத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். யோசேப்பு கர்த்தரோடு நெருங்கி வாழ்ந்தான். அதனால்தான் அந்த பயங்கரமான பாவத்தில் விழாமல் பாதுகாக்கப்பட்டான். நாமும் கர்த்தரோடுகூட உள்ள ஐக்கியத்தில் (வேதத்தை தியானிப்பதிலும், ஜெபத்திலும் தரித்திருந்தால்) வளரும்போது பாவத்தை மேற்கொண்டு பரிசுத்தமாக வாழலாம்.

**பரிசுத்தம் தரும் ஆசீர்வாதம்**

இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களுக்கு, தேவன் பல ஆசீர்வாதங்களுக்கான வாக்குகளை கொடுக்கிறார். நான் அவர்களை கழுவி சுத்தமாக்கினேன், பாவத்திற்கு விலக்கி காப்பாற்றுவேன் என்றும், நான் அவர்கள் தேவனாக இருப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்; நான் அவர்களை நிலைப்படுத்தி, அவர்களை வர்த்திக்கப்பண்ணி, அவர்கள் நடுவிலே என் பரிசுத்தஸ்தலத்தை என்றென்றைக்கும் ஸ்தாபிப்பேன் (எசேக்கியேல் *37:26*). நான் இஸ்ரவேலை பரிசுத்தம் பண்ணும் கர்த்தர் என்று புறஜாதிகள் அறிந்து கொள்ளும்படி செய்வேன் என்றும், தேவ ஆவியினால் நிரப்பி, உணர்வுள்ள இருதயத்தைக் கொடுத்து, ஆவியானவரின் வழிநடத்துதலால் கீழ்ப்படியச் செய்வேன் என்றும் சொல்லியிருக்கிறார். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை ஏற்றுக் கொண்டவருக்கு, தேவனுடைய பிள்ளைகளாகும்படி உரிமையை கொடுத்திருக்கிறார் (யோவான் *1 : 12*). தேவனுடைய ஆவியினாலே வழிநடத்தப்படுகிறவர்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள். நமக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவர் பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு - இந்த மூன்றை குறித்தும் நமக்கு கண்டித்து உணர்த்துவார் (யோவான் *16:8*). நாம் இயேசு கிறிஸ்துவைப் போல பாவத்தை மேற்கொண்டு, பரிசுத்தமாய் வாழவே

வெள்ளி, பொன், முத்து இவைகளையெல்லாம் கொடுத்தாலும் ஞானம் கிடைக்காது. ஆனால், ஞானம் இருக்கும் இடத்திற்கு இவையெல்லாம் தேடி வரும்.



பரிசுத்த ஆவியை தேவன் கொடுத்திருக் கிறார். நமக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவர் பாவத்தை நமக்கு சுட்டிக்காட்டி, அந்த பாவத்தை மேற்கொள்ளத்தக்கதான பெலனைத் தருகிறார். பாவத்தினிமித்தம் குற்றமனச்சாட்சியோடு இருக்கும் நமக்கு, சிலுவையிலே இயேசு கிறிஸ்து பாவத்தையும், பாவத்தினிமித்தம் வரும் மரணத்தையும் வெற்றிசிறந்து நம்மை நீதிமானாக்கியிருக்கிறார் என்பதை நமக்கு கற்றுக்கொடுத்து, அதை விசுவாசிக்கவைக்கிறார். இனிவரும் நியாயத் தீர்ப்பைக் குறித்து நமக்கு எச்சரிக்கையும் கொடுக்கிறார். எப்பொழுதும் தேவ பயத்தோடு தீமைக்கு விலகியிருக்கும்படி, பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்துகிறார்.

**அற்புதங்களை பெறவேண்டுமா?**

மோசே மரித்தபின்பு யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை கானானுக்கு நேராக வழிநடத்திச் சென்றான். அவர்கள் தரைவழியாய் செல்ல முடியாதபடிக்கு அங்கே யோர்தான் நதி ஓடிக்கொண்டிருந்தது. அந்த நதியை அவர்கள் கடந்துபோக வேண்டிய சூழ்நிலை. அப்பொழுது யோசுவா ஜனங்களைப் பார்த்து இப்படிச் சொல்கிறான்:

**உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்; நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்.**

**- யோசுவா 3:5**



ஏனென்றால் பாவமன்னிப்பை பெற்றுக் கொண்டால்தான் பரிசுத்தமாக முடியும். பரிசுத்தமில்லாமல் தேவன் அற்புதத்தை செய்ய முடியாது. மறுநாள் ஆசாரியர்கள் உடன்படிக்கை பெட்டியை எடுத்துக் கொண்டு ஜனங்களுக்கு முன்பாக சென்றார்கள். ஆசாரியர்களின் கால்கள் நதியில்பட்ட மாத்திரத்திலே மேலிருந்து கீழாக வந்த நதி பின்னோக்கிச் சென்று ஒரு குவியலாய் நின்றது. தண்ணீர் பிரிந்து சென்றதால் அங்கு ஒரு வழி உண்டானது. ஜனங்கள் அந்த வழியே கடந்து சென்றார்கள்.

ஜனங்கள் தங்களை பரிசுத்தப்படுத்திக் கொண்டதினாலே தேவனிடத்தில் ஒரு அற்புதத்தை பெற்றுக் கொண்டார்கள். நாமும் பரிசுத்தமில்லாமல் கர்த்தரிடமிருந்து எதையும் பெறமுடியாது. நம் வாழ்க்கையில் அற்புதங்கள் நடக்க வேண்டுமானால் நமக்கு பரிசுத்தம் அவசியம். இன்றைக்கு அநேகர் தங்களுடைய வாழ்க்கையில் போராட்டத்தையும், கஷ்டத்தையும், வேதனையையும், நெருக்கத்தையும், ஏன் சந்திக்கிறார்கள் என்றால் பாவத்தின் பாதையில் செல்வதாலும், தேவசித்தத்தை அறிந்தும் அதன்படி நடக்காமல் தங்கள் சொந்த வழியில் செல்வதாலுமே. கர்த்தர்

அவருடைய சிருஷ்டிப்பு ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பிரமாணத்தை வைத்திருக்கிறார். இந்த பிரமாணத்தின்படியே அவர் எல்லாவற்றையும் செய்கிறார்.

ஞானம் இருந்தால், நாம் எங்கிருந்து வந்தோம்? எங்கே இருக்கிறோம்? எங்கே போகிறோம்? - இவற்றுக்கான பதில் கிடைத்துவிடும். அதனால் நம்மிடம் அவசரம் இருக்காது. வாழ்க்கையில் திருப்தி இருக்கும்.

மனிதர்களாகிய நம்மை அவர் ஆசீர்வதிப்பதற்கு பரிசுத்தத்தை ஒரு பிரமாணமாக வைத்திருக்கிறார். அப்படி பரிசுத்தமாய் நாம் இருக்கவேண்டிய வழிமுறைகளை எழுதியும் கொடுத்திருக்கிறார். அதுவே வேதபுஸ்தகம். வேதவசனமே சத்தியம் (1 யோவான் 17:17). இந்த சத்தியம் நம்மை பரிசுத்தப்படுத்தும் தேவனுடைய வார்த்தைகள் நம் நினைவுகளையும் யோசனைகளையும் பரிசுத்தப்படுத்தும் நம்மை பாவத்திலிருந்து விலக்கி, பாதுகாத்து பரிசுத்தப்படுத்தும்.

**முடிவு பரியந்தம் - பரிசுத்தம்**

**இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிக்க வேண்டும்.**

- 2 பேதுரு 3:11

கர்த்தருடைய வருகை இரவிலே திருடன் வருகிற விதமாய் இருக்கும். அப்பொழுது வானங்களும் அதிலுள்ளவைகளும், பூமியும் அதிலுள்ள மக்களும், அதிலுள்ள சகலமும் அக்கினியினாலே அழிந்துபோகும். கடைசி நாட்களில் உலகத்தின் மக்கள், தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, கர்த்தர் வருவார் என்று வாக்களித்துள்ளார். அவர் எங்கே என்று அவர் வருகையைக் குறித்து சந்தேகப்படுவார்கள், அவர் வர தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறார்கள்.

ஏனென்றால் எல்லோரும் நரகத்திற்கு போகாமல் பரலோகம் செல்வதையே தேவன் விரும்புகிறார். ஒவ்வொருவரும் தங்களது இதயத்தை மாற்றி, தாங்கள் செய்கிற தவற்றை உணர்ந்து, பாவம் செய்வதை விட்டுவிட்டு மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். ஆம், நாம் இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லும்போது, பரலோகத்திற்கு செல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும். நம் உள்ளான மனுஷனில் பரிசுத்தம் வேண்டும். நம்முடைய எண்ணங்களில், சொற்களில் செயல்களில் பரிசுத்தம் காணப்படவேண்டும். இயேசு கிறிஸ்துவின் வருகை வரை நம் ஆவி, ஆத்துமா, சரீரத்தை கரையற்றதாக, குற்றமற்றதாக காத்துக்கொள்வோமாக (1 தெசலோனிக்கேயர் 5:23).

தேவனுடைய ஆவியானவர்தாமே உங்களுக்குள்ளே இருந்து, பரிசுத்தத்தை தந்து, பரிசுத்தத்தினிமித்தம் கிடைக்கும் எல்லா ஆசீர்வாதங்களையும் உங்களுக்கு அளவில்லாமல் தருவாராக!





# கர்த்தர் தந்த ஜோயன்!

**அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை கண்ணோக்கிப் பார்த்தார்...**

**- லூக்கா 1:48**

நானும் (திருமதி. ஷகிலா இனிகோ), திரு. இனிகோவும் பிப்ரவரி 1999-ல் கணவனும் மனைவியுமாகத் திருமணத்தில் இணைந்தோம். ஆனால், பல வருடங்களாக எங்களுக்குக் குழந்தைப் பாக்கியம் இல்லை. பலவிதமான மருத்துவ சிகிச்சைகளை மேற்கொண்டும் பலன் கிடைக்கவில்லை. களைத்துப் போகாமல் ஜெபித்துக்கொண்டே இருந்தோம். கடந்த ஜூன் மாதம் 2007-ல் சகோதரர் பால்ராஜ் கென்னடி எனக்காக ஜெபித்தபொழுது தீர்க்கதரிசனமாக, ''தேவனுக்கு மகிமை. நீங்கள் ஒரு ஆண் குழந்தையுடன் நின்று கொண்டு, கர்த்தரைக் குறித்து காட்சி கொடுக்கிறீர்கள்'' என்று கர்த்தர் அவர்களுக்குக் காண்பித்த தரிசனத்தைச் சொன்னார்கள். கர்த்தர் இந்த அடிமையின் தாழ்மையைக் கண்ணோக்கிப் பார்த்தார். ஆம், கடந்த 3.4.2009-ல், கர்த்தர் எனக்கு ஒரு ஆண் குழந்தையை (ஜோயன் - கர்த்தர் தந்த பரிசு) கொடுத்தார். அல்லேலூயா! நான் கர்ப்பந் தரித்திருந்த காலம் முழுவதும் கர்த்தரின் தயவுள்ள கரம் என்கூடவே இருந்தது. 37 வயதில் எனக்கு சுகப் பிரசவத்தையும் கர்த்தர் தந்தார். கர்த்தருக்கே கனத்தையும், மகிமையையும் குடும்பமாக செலுத்துகிறோம். நம் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும், இயேசுவைப்போல் நமக்கு உதவி செய்யக்கூடிய நல்ல நண்பன், இரட்சகர் வேறு யாரும் இல்லை. இந்த சாட்சி, கர்த்தர் நம் எல்லோரையும் பரலோகத்திலிருந்து எப்போதும் பார்த்துக் கொண்டே இருக்கிறார் என்ற நிச்சயத்தைத் தரும் என்று நம்புகிறேன். மகிமை நம் தேவன் ஒருவருக்கு மாத்திரமே!

**- திருமதி. ஷகிலா இனிகோ, சிங்கப்பூர்.**


**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

**ICICI வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**



**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

**உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்**

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com**

இணைய தளம் : **www.kennedyministries.org**




# என் பரலோக தரிசனங்கள்

(தொடர்ச்சி)

**Dr. டி.ஜி.எஸ். தினகரன்**

- இவ்வுலகில் அநேகர் சரீர குறைபாடுகளுடன் மரிக்கின்றனர். எனினும் பரலோகத்தில் அவர்கள் ஆவியின் ரூபத்தில் பரிபூரண நிலையில் காட்சியளிக்கிறார்கள்.

- சிறு குழந்தைகள் மரணமடையும்போது பரலோகத்திற்கு தேவ தூதர்களால் (மத்தேயு *18:10*) ஏந்திக் கொண்டு செல்லப்படுகிறார்கள். எண்ணிக்கையில் இலட்சங்களுக்கு மிஞ்சிய சிறுவர்கள் ஒருங்கே கூட்டப்பட்டு, உலகத்தில் எவ்வாறு 30 வயதுவரை உருவ வளர்ச்சி பெறுவார்களோ அதேவிதமான வளர்ச்சியை பெறச் செய்வது கண்களுக்கு இதமானது. ஒரு தனிப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டு, அவர்கள் தூதர்களால் பராமரிக்கப்படுகிறார்கள். மாட்சிமை மிகும் யேகோவாவையும் அவருடைய குமாரனாகிய இயேசுவையும் பற்றிய அறிவு தூதர்களால் அருளப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

- ஒருமுறை நான் ஆண்டவரோடு பரலோகத்தில் நடந்து கொண்டிருக்கும்போது, ஒரு கரகரப்பான குரலில் ஒருவர் தனிமையில் ஆண்டவரைத் துதித்துப் பாடுவதைக் கேட்டேன். ''யார் பாடுவது என்று உனக்குத் தெரிகிறதா?'' என்று ஆண்டவர் என்னைக் கேட்டார். எனக்குத் தெரியவில்லை என்றேன். பிறகு அவர் என்னை அங்கே அழைத்துச் சென்றார். யூதர்களின் ஆராதனைக் கூடத்தைப்போன்ற ஒரு அமைப்பில், கண்ணியமான மனிதர் ஒருவர் தன் இரு கரங்களையும் கூப்பி, குரலை உயர்த்தி ஆண்டவரை துதித்துக் கொண்டிருந்தார். அவர் முகம் தேவனின் அபிஷேகத்தால் ஒளிவீசிக் கொண்டிருந்தது. ''இவர்தான் தாவீது ராஜா. அவர் பரலோகம் வந்தபோது, இங்கு என்ன செய்ய விரும்புகிறாய்'' என்று நான் கேட்டதற்கு, தயக்கமின்றி, ''ஆண்டவரே, நான் பூமியில் இருந்த நாட்களில் உம்மை துதிப்பதே என் பேரின்பமாக இருந்தது. அதையே நான் இங்கும் செய்ய விரும்புகிறேன்'' என்றார். ''அவர் உலகத்தில் இருக்கும்போது எப்படிப்பட்ட இடத்தில் கர்த்தரைத் துதித்தாரோ, அதே வடிவில் இங்கு நான் அவருக்காக செய்துள்ளேன்'' என்று என்னிடம் கூறினார். இது மட்டுமல்ல, சில சமயங்களில் மற்ற வேதாகம சத்தியங்கள் பலவற்றைக் குறித்து பேசுவதற்காக நான் தாவீது இராஜாவை சந்தித்துள்ளேன்.



- உலகத்திலிருக்கும்போது ஒருவனுடைய ஆத்துமா அடைகிற ஆவிக்குரிய தகுதிக்கு ஏற்றபடி மாத்திரமே பரலோக வாசஸ்தலத்தில் அவனுக்கு ஆண்டவர் இடத்தை அமைத்துக் கொடுக்கிறார். இல்லையென்றால் சர்வ வல்ல தேவனுடைய மகிமையையும் பிரகாசத்தையும் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது.

- பரலோகத்தின் வாசல் வழியே அநேக முறை கடந்து சென்றுள்ளேன். என்றாலும், அந்த நாளில்தான் ஒரு தேவதூதன் அந்த வாசலின் ஒருபுறம் அமர்ந்து ஒரு சுருளில் எந்நேரமும் எழுதிக் கொண்டேயிருப்பதைக் காணும்படி பரிசுத்த ஆவியானவர் என் கண்களைத் திறந்தார். நான் போய் அவனருகில் நின்று கொண்டிருந்த போதிலும், கவனம் கலையாமல் தொடர்ந்து சுருளில் அவன் எழுதிக் கொண்டேயிருந்தான். அதில் ஒரு நபரின் பெயர், பிரசங்கி **6:10**-ல் உள்ளபடி, அந்த நபரின் முகவரி, பிறந்த தேதி, அவனோ, அவளோ இப்பூமியில் இறுதிமூச்சை விடும் தேதி மற்றும் அந்த நபரின் வாழ்வின் முக்கிய சம்பவங்கள் யாவும் பதிவும் பண்ணப்படுகின்றன.

- ஒருமுறை சிம்சோன் பரலோகத்தில் இருப்பதை குறித்த சந்தேகம் எனக்குள் எழுந்தது. என்னுடைய குறுகிய அறிவின்படி, பின்வாங்கிய மனிதனாக அவன் இவ்வுலகத்தை விட்டுச் சென்றதால், எபிரெயர் *11:32-34*-ல் உள்ள வல்லமையான விசுவாச வீரர்களின் பெயர் பட்டியலில் அவருடைய பெயரும் இடம் பெற்றிருப்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. ஒரு நாள் நான் சிம்சோனையும் சந்திக்க உதவி செய்யும்படி கர்த்தர் சித்தம் கொண்டார்.

- பெரிதளவில் பாராட்டப்பட்ட இந்தியாவின் பரிசுத்தவான் சாது சுந்தர் சிங் அவர்களுடன் சிறிது நேரம் செலவிடும் சந்தர்ப்பங்களை இந்த இரண்டாம் வானத்தில் ஆண்டவர் எனக்கு கிடைக்கச் செய்தார். அவர் முகத்தில் பிரதிபலிக்கப்பட்ட தெய்வீக சந்தோஷம் விவரிக்க இயலாதது.

- மூன்றாம் வானத்தை, முதல் முறையாகக் காணும் பாக்கியத்தை நான் பெற்றபோது,பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களை தேவன் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். தீர்க்கதரிசிகளாகிய எலியா, ஏனோக்கு இவர்களின் சரீர தோற்றத்தை கண்டு அசந்து போனேன்.

- மோசேயின் தோற்றம் கெம்பீரமாய் காட்சியளிக்கிறது. அவருடைய முகம் ஏறக்குறைய நம் அன்பு நிறைந்த அருள்நாதர் இயேசுவின் முக சாயலுக்கு ஒத்திருந்தது.

- இந்த பூவுலகில் இயேசுவோடுகூட சஞ்சரித்த புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள், மூன்றாம் வானத்தின் மற்றொரு பகுதியில் காணப்படுகிறார்கள். இயேசுவின் சீஷர்கள் மற்றும் பவுல் போன்றோரை அங்கு காணமுடியும்.



பாகம்
01

# ஜெபம்

**எஸ்.பால்ராஜ் கென்னடி**

**ஜெபத்தைக் கேட்கிறவர்...**

**- சங்கீதம் 65:2**

ஜெபம் என்பது நம் பரம தகப்பனோடு பேசுவதாகும். ஆபிரகாமோடும், மோசேயோடும் ஒரு நண்பனோடு பேசுவதுபோல பேசினேன் என்று சொல்கிறார் நம் தேவன். ஒரு மனுஷனாகவே தேவன் இந்த பூமிக்கு வந்து மனுஷனோடு மனுஷனாக சஞ்சரித்தார்.

இதை எழுதும் நேரத்திலே எனக்கு ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது. வாட்ச்மேன் நீ என்னும் ஊழியக்காரர், வீட்டில் உட்கார்ந்திருக்கிறார். பால்கனியில் சில சோற்றுப் பருக்கைகள் தரையில் விழுந்து கிடக்கிறது. அதை சாப்பிடுவதற்காக சில புறாக்கள் அங்கு வந்து, அதை சாப்பிடுகின்றன. இவருக்கு அந்த புறாக்களிடம் நெருங்கிப் போக ஆசை, எழுந்து கிட்டப்போகிறார். அந்தோ... இவர் கிட்டப் போனவுடன் அந்தப் புறாக்களெல்லாம் பயந்து, பறந்துபோய் விடுகின்றன. சோர்ந்துபோய் வீட்டினுள்ளே வந்து உட்கார்ந்து விடுகிறார். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்தப் புறாக்கள் மீண்டும் வந்து சோற்றுப் பருக்கைகளை சாப்பிட ஆரம்பிக்கின்றன. இவர் மறுபடியுமாக அவைகளை நெருங்கிப் போகிறார். ஐயகோ, மீண்டும் அவைகளெல்லாம் இவரைப் பார்த்து பயந்து பறந்துபோய் விடுகின்றன. மீண்டும், மீண்டுமாக அவர் இப்படி முயற்சி செய்து சோர்ந்து போய் விடுகிறார். அப்பொழுது அவர் நினைக்கிறார்: நாமும் ஒரு புறாவாக இருந்தால், இந்தப் புறாக்களெல்லாம் நம்மைப் பார்த்து பயப்படாதல்லவா? என்று. இப்படிப்போலத்தான் நமது தேவனும், நம்மோடு நெருங்கி உறவாட ஒரு மனுஷனாக இயேசு கிறிஸ்துவாக இந்த பூமிக்கு வந்தார்.

ஜெபம் என்பது ஆண்டவரோடு, நாம் சஞ்சரிப்பதாகும். ஜெபம் என்பது நம் பரம தகப்பனோடு பிள்ளைகளாகிய நாம் கொள்ளும் ஒரு ஐக்கியமாகும். நாம் பேசும்போதெல்லாம் அவர் கேட்கிறார் (*சங்கீதம் 65:2*). இஸ்ரவேலைக் காக்கிறவர் தூங்குவதுமில்லை; உறங்குவதுமில்லை. நாம் எந்த வேளையில் கூப்பிட்டாலும் அவர் நமக்கு செவிகொடுக்கிறார்.



> "முதலாவது வேதத்தில் யார் யார் எப்படி ஜெபித்தார்கள் என்று கவனமாகப் படிக்க வேண்டும். இரண்டாவது, மற்றவர்கள் ஜெபிக்கும்போது அதை கவனிக்க வேண்டும்"

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம், அவருடைய சீஷர்கள் ஜெபிக்கக் கற்றுக் கொடுக்கும்படி கேட்கிறார்கள். இதிலிருந்தே ஜெபத்தின் முக்கியத்துவம் நமக்குத் தெரிகிறது.

நாம் எல்லோருமே ஜெபிக்கிறோம். அதே சமயத்தில் இன்னும் நன்றாக ஜெபிக்க வாஞ்சிக்கிறோம். நம் தேவன் மாம்சத்தில் இயேசு கிறிஸ்துவாய் இந்த பூமியில் இருந்த நாட்களில் தனித்து,இரவு முழுவதும் ஜெபத்தில் பிதாவோடு பேசிக் கொண்டிருந்தார் என்று வேதத்தில் வாசிக்கிறோம். சங்கீத புஸ்தகத்தில் தாவீது எப்படியெல்லாம் ஜெபித்தான் என்று பார்க்கிறோம். அப்படியென்றால் ஜெபத்தை கற்றுக் கொள்வது எப்படி? முதலாவது வேதத்தில் யார் யார் எப்படி ஜெபித்தார்கள் என்று கவனமாகப் படிக்க வேண்டும். இரண்டாவது, மற்றவர்கள் ஜெபிக்கும்போது அதை கவனிக்க வேண்டும்.

நாம் ஜெபிக்கும்போது, கர்த்தர் அதை கேட்கிறார் என்று விசுவாசிக்க வேண்டும். எடுத்த உடனே ஜெபிக்க ஆரம்பித்துவிடக்கூடாது. முதலாவது சில பாடல்களைப் பாடவேண்டும்.அப்படி பாடும்போது கல்வாரி சிலுவையில் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தொங்கும் காட்சியைக் கண்முன்னால் கொண்டுவந்து, அவரை நோக்கி (அவருடைய அந்த அளவற்ற அன்பை நினைத்து) பாடவேண்டும். நம்மைப்பற்றியும் மற்றவர்களைப் பற்றி நினைப்பதையும் அறவே நிறுத்த வேண்டும். அதற்காகவே இந்த சிலுவை காட்சியை நினைவில் கொண்டு வருவதாகும். நம் சிந்தனை முழுவதும் ஆண்டவர்மேலேயே இருக்க வேண்டும்.

அப்படி பாடும்பொழுதே சில காரியங்களை அந்த பாட்டின் வார்த்தைகள் மூலம் நம்மோடு இடைபடுவார் (உள்ளத்தில் உணர்த்துவார்). அந்த காரியத்தை வைத்து முதலாவது ஜெபிக்க வேண்டும். உதாரணமாக, நாம் பாடிக் கொண்டிருக்கும்பொழுது நமது சுகத்தைப் பற்றி உணர்த்துகிறார் என்றால், கொடுத்த சுகத்துக்காக நன்றி சொல்ல வேண்டும். ஒருவேளை, நமது குடும்பத்திலுள்ள மூத்த வயதுடையவர்களில் ஒருவரை நமக்கு உணர்த்தினால் அவர்களுடைய சுகத்துக்காக ஜெபிக்கவேண்டும். முதலாவது இம்மட்டுமாக அவர்களுக்கு கொடுத்த சுகத்துக்காக நன்றி என்று சொல்லி ஜெபிக்க வேண்டும். அதைத் தொடர்ந்து, அவர்களுக்கு கர்த்தர் தொடர்ந்து சுகம், பெலன் தந்து, பாதுகாக்க ஜெபிக்க வேண்டும்.

ஜெபிப்பதிலே முக்கியமான காரியம்: வேதத்தை நன்கு படிக்க வேண்டும். வேதத்தை படிக்கும்பொழுதுதான் அவரது சித்தம் என்ன என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். அவருக்குப் பிடித்தது என்ன? பிடிக்காதது என்ன? என்பவற்றையெல்லாம் நாம் தெளிவாக தெரிந்து கொண்டால்தான் தைரியமாய் ஜெபிக்க முடியும் (*1 யோவான் 5:14*).

- தொடரும்